بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுைல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 24.04.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஒரு கேள்வி முன்பைவிட அதிகம் தீவிரமாக இன்றைய நாட்களில் இளைஞர்களின் மூளையில் குறிப்பாகவும், சமுதாயத்தில் மார்க்கத்திற்கு எதிராக இருப்பவர்களிடமிருந்து பொதுவாகவும் அதிகமாக கேட்கப்படுகின்றது. சமுதாயத்தில் பரப்பப்படுகின்றது. கேள்வி என்னவென்றால் ஒருவரிடம் நல்லொழுக்கம் இருந்தால் அல்லது உலகக்கல்வி ஒருவரை நல்லொழுக்கத்தின் பக்கம் கொண்டு செல்கின்றதென்றால் பிறகு மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன ? மார்க்கமும் கூட உங்களுக்கு அது நல்லொழுக்கத்தை கற்றுத் தருகின்றது என்ற வாதத்தை தானே செய்கின்றது. அல்லது மார்க்கத்தை ஏற்றுக் கொள்பவர்களும் இதைத் தான் கூறுகின்றனர். நல்லொழுக்கம் ஏற்கனவே எங்களிடம் உருவாகி விட்டது. இன்னும் சொல்வதென்றால் உலகவாதிகளாக இருப்பவர்களில் பெரும்பாலாரின் நல்லொழுக்கம் மார்க்கத்தை ஏற்றுக் கொள்பவர்களை விட சிறந்ததாக இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. இதனை கூறி குறிப்பாக இஸ்லாமே குறி வைக்கப்படுகின்றது. ஏனைய மதங்களைப் பின்பற்றுகின்ற பெரும்பாலான மக்கள் ஏறக்குறைய மார்க்கத்துடன் தொடர்பில்லாதவர்களாகவே ஆகிவிட்டனர். இஸ்லாம் மட்டுமே எத்தகைய மார்க்கமாக இருக்கின்றதென்றால் அதனோடு தங்களை தொடர்புபடுத்தி கூறுபவர்கள் தங்களது மார்க்கத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் வெளிப்படுத்திக் கூறுகின்றனர். அல்லது செயல் இல்லாத முஸ்லிம்கள் கூட தங்களை முஸ்லிம்கள் என்றே பகிரங்கமாக கூறுகின்றனர். தங்களை மார்க்கத்துடன் தொடர்புபடுத்தி கூறுகின்றனர்.

எனவே அசல் தாக்குதல் இஸ்லாத்தின் மீதே தொடுக்கப்பட்டிருக்கின்றது. மார்க்கத்தை விட்டு விலக்கும் முயற்சியில் பல்வேறு வழிமுறைகள் மூலமாக பல்வேறு கருத்துக்களை கூறி சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் மூளைகளில் விஷத்தை நிரப்புவதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளிலுள்ள கல்வி கற்கும் வழிமுறையில் தேடுதல் மற்றும் ஆராய்ச்சி செய்வது ஆகியவற்றின் பக்கம் அதிகம் கவனமூட்டப்படுகிறது. இது நல்ல விஷயம் தான். இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் தான். இதற்காக சரியான வழிமுறையையும் கடைபிடிக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும், இளைஞர்களும், வாலிப வயதில் காலெடுத்து வைக்கும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் தங்களது வீடுகளிலுள்ளவர்களிடமும், தங்களது பொற்றோர்களிடமும், தங்களை விட பெரியவர்களிடமும் தங்களது இதன் காரணமாக அவர்களது கேள்விக்கு பதில் கூறுவதற்கு பகரமாக சில நேரங்களில் அவர்களை அமுக்குவதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. இதன் காரணமாக வாலிப வயதில் அடியெடுத்து வைக்கும் சிறுவர்கள் மார்க்கம் என்பது அது இஸ்லாமாக இருந்தாலும் அது உண்மையானது என்று வாதம் செய்தாலும் எல்லா பிரச்சனைகளுக்கும் அதில் தீர்வு இருக்கின்றது என்று கூறினாலும் காலத்திற்கேற்ப செயல் அளவிலான தீர்வு அதில் இல்லை அல்லது அதற்கு பதில் இல்லை என்று கருதுகின்றனர். அல்லது இவ்வாறும் நடக்கின்றது. அதாவது பெரியவர்களின் செயல் மற்றும் குழந்தைகளுக்கு புகட்டப்படும் கல்வி ஆகிவற்றிற்கிடையில் முரண்பாடு இருக்கின்றது. சிறுவர்கள் ஒரு காலம் வரை கல்வியிலுள்ள விஷயங்களை கேட்டு விட்டு அமைதியாக இருந்து விடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு சுதந்தரம் கிடைக்கும் போது மார்க்கத்தை விட்டு விலகி தொலைவில் சென்று விடுகின்றனர். பிறகு மார்க்கத்தை விட்டு விலக்கி தொலைவில் கொண்டு செல்பவர்களின் பிடியின் கீழ் வந்து விடுகின்றனர்.

இதன் காரணமாகவே இஸ்லாத்தில் அழகிய போதனைகள் இருந்தும் இஸ்லாம் உயிருள்ள மார்க்கமாக இருந்தும் முஸ்லிம்களில் கூட மார்க்கத்தையும் இறைவனையும் மறுக்கக்கூடிய அத்தகைய மக்கள் தென்படுகின்றனர். இத்தகைய நிலைமையில் நம்மில் ஒவ்வொருவரும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். எவ்வாறு நாம் நம்மை நாமே மார்க்கத்திற்கேற்ப செயல்படுபவர்களாக ஆக்க முடியும் ? எவ்வாறு நமது தலைமுறையை பாதுகாக்க முடியும் ? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த காலத்தில் அல்லாஹ் நம்மீது பேருபகாரம் செய்துள்ளான். அதாவது இந்த பிரச்சனைகளிலுள்ள சிக்கல்களை அகற்றுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அவன் அனுப்பியுள்ளான். அவர்கள் இதனை புரிந்த கொள்வதற்கான அறிவை நம்மிடம் உருவாக்கியுள்ளார்கள். இது

போன்ற விஷயங்களை புரிந்து கொள்வதையும் அதற்கான தீர்வை பெறுவதையும் அவர்கள் நமக்கு எளிதாக்கிவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒருமுறை இதனை விளக்கியவாறு ஒரு குத்பா நிகழ்த்தினார்கள். நல்லொழுக்கத்தை சரிசெய்வது, பௌதீகம், மார்க்கம் ஆகியவற்றிற்கிடையில் என்ன தொர்பு இருக்கின்றது ? இஸ்லாம் இதனை எவ்வாறு காண்கின்றது ? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு தனது செயல் மூலமாகவும், தனது செயல் அளவிலான முன்மாதிரியின் மூலமாகவும் இதனை நமக்கு புரிய வைத்துள்ளார்கள் ? இதன் உண்மை நிலை என்ன ? என்பதை அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள்.

இஸ்லாம் எத்தகைய மார்க்கம் என்றால் அதனை முற்றிலும் மனித இயல்பிற்கு ஏற்ற மார்க்கம் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி)அவர்கள் கூறுகின்றார்கள்.

மார்க்கம், நல்லொழுக்கம், மனிதனின் உடலுடன் தொடர்புள்ள அவனது தேவைகள் ஆகியவை எந்த அளவு ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றதென்றால் அவற்றை வேறுபடுத்திப் பார்ப்பது கடினமாகும். எவர் மார்க்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றாரோ அவர் நல்லொழுக்கத்தை மார்க்கதை விட்டு பிரித்து விட முடியாது. அவ்வாறே மார்க்கம் என்னை உலகைப் பொருட்படுத்தாதவனாகவும், உலகை விட்டு தன்னிறைவு பெற்றவனாகவும் ஆக்கிவிட்டது. எனக்கு இப்போது எந்தத் தேவையும் இல்லை என்று அவரால் கூற முடியாது. இப்போது எனக்கு எந்த பொருளின் தேவையும் இல்லை என்ற சிந்தனை இருந்தால் பிறகு மனிதனின் முன்னேற்றம் அதாவது பௌதீக முன்னேற்றத்தின் சக்கரம் நின்றுவிடும். மார்க்கம், நல்லொழுக்கம் மற்றும் பௌதீக முன்னேற்றம் ஆகியவை ஒன்றுமற்றொன்றுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. இவ்வாறிருந்தும் இவற்றிற்கிடையில் வித்தியாசமும் இருக்கின்றது. மார்க்கத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் நல்லொழுக்கம், பௌதீக முன்னேற்றம் ஆகியவை மனிதனின் தேவையாக இருக்கின்றது என்று கூறி மார்க்கத்தை விட்டும் சுதந்திரமாக இருப்பதற்கு முயற்சி செய்கின்றனர்.

ஆக, இது சிந்திப்பதிலுள்ள வித்தியாசமாகும். நாம் இந்த விஷயங்களை எவ்வாறு பார்க்க வேண்டும் ? இவற்றில் ஒன்றிற்கு மற்றொன்றுடன் உள்ள தொடர்பை எவ்வாறு இணைக்க வேண்டும் ? மற்ற மதங்கள் மரணித்துக் கொண்டிருக்கின்றன. இஸ்லாம் மட்டுமே இவற்றிற்கிடையிலுள்ள தொடர்பை நிரூபிக்கக்கூடிய மார்க்கமாக இருக்கின்றது. ஆனால் முஸ்லிம்களில் பெரும்பாலார் மார்க்கத்தின் உண்மையை புரிந்து கொள்ளாமல் தவறான முறையில் நல்லொழுக்கத்துடன் தொடர்புடைய விஷயங்களையும், பௌதீகத்துடன் தொடர்புடைய விஷயங்களையும் மார்க்கத்துடன் எவ்வாறு இணைத்துள்ளனர் என்றால் அதில் பல விஷயங்களையும் மிகைப்படுத்திக்கூறி மார்க்கத்தை அழகானதாக ஆக்கி எடுத்து வைத்து அதன் பக்கம் மக்களை ஈர்ப்பதற்கு பகரமாக அவர்கள் மார்க்கத்தை விட்டு விலக்கி மக்களை தொலைவில் கொண்டு செல்பவர்களாக ஆகிவிட்டனர்.

இதன் காரணமாகவே தீவிரவாதத்தை விரும்புகின்ற பல்வேறு பிரிவுகள் தங்களது இஸ்லாத்தை அமல்படுத்துவதற்காக தமது நல்லொழுக்கத்திற்கான வழிமுறைகளையும் அல்லது பெயர்தாங்கி சட்டங்களையும் உருவாக்குகின்றனர். சிரியாவிலும், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் மார்க்கத்தின் பெயரால் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் மூலமாக ரத்தத்தை ஓடச் செய்கின்றனர்.

எமனில் என்னவெல்லாம் நடைபெறுகிறதோ அதற்கும் இதுவே காரணமாகும். அப்பாவிகளை கொலைகின்றனர். இவ்வாறு உண்மையான இஸ்லாத்திற்கும், இவர்கள் செயல்படுகின்ற இந்த இஸ்லாத்திற்கும் இடையில் எந்தவொரு உண்மையான தொடர்பும் இல்லாமல் ஆகிவிட்டது. இந்த ஆலிம்கள் மற்றும் ஃபத்வா கொடுப்பவர்களுக்கு பின்னால் சென்று முஸ்லிம்களும் இஸ்லாத்தை விட்டு தொலைவில் சென்று விட்டனர். எனவே, மார்க்கத்தின் பெயரால் இவர்களுக்கு ஏதாவது பலன் கிடைக்க முடியும் என்றால் அது இவ்வளவு தான். அதாவது ஓரளவு நல்லொழுக்கத்தில் அவர்கள் சிறந்து விளங்குகின்றனர். மார்க்கத்தின் மீது அவர்களுக்கு அச்சம் இருக்கின்றது. அதுவும் கூட சரியான மதத்தைப் பின்பற்றும் போது தான் அது இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். எவர்களிடம் முதலிலேயே நல்லொழுக்கங்கள் இருக்கின்றனவோ அவர்கள் எங்களுக்கு மார்க்கத்தின் என்ன தேவை இருக்கின்றது என்று கூறுகின்றனர். ஆனால் சிந்தித்துப் பார்த்தால் பௌதீகமும், நல்லொழுக்கமும், மார்க்கமும் ஒன்றுக்கொன்று எவ்வளவு நெருக்கமானதாக இருக்கின்றதென்றால் எங்கிருந்து இதன் எல்லை ஆரம்பிக்கின்றது ? எங்கு அது முடிவடைகின்றது? என்பதை ரு சாதாரண மனிதர் தெரிந்து கொள்ள முடியாது. இதனைப் புரிந்து கொள்வதற்கு நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய வாழ்க்கைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதைப் படிக்க வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் உலகின் பௌதீக சீர்திருத்தவாதியும் ஆவார்கள். நல்லொழுக்க சீர்திருத்தவாதியும் ஆவார்கள். ஆன்மீக சீர்திருத்தவாதியும் ஆவார்கள். பெருமானார் (ஸல்) அவர்களது தூய வாழ்க்கை எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கின்ற ஒரு தொகுப்பாக விளங்குகின்றது. ஒரு பக்கம் الدعاء مخ العبادة அதாவது துஆ இறைவணக்கத்தின் சாராம்சம் ஆகும் என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள் என்றால் மறுபக்கம் ஆன்மீகத்தை முழுமைப்படுத்துவது பற்றியும் அவர்கள் வழியுறுத்தி கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பார்வையில் துஆவில் மூன்று விஷயங்கள் இருப்பது அவசியமானதாகும். முதலாவதாக, நான் கேட்கின்ற விஷயம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று உள்ளத்தில் உறுதியான எண்ணம் இருக்க வேண்டும். இரண்டாவதாக, எவனை நான் அழைக்கின்றேனோ அவனிடம் உதவி செய்வதற்கான சக்தி இருக்கின்றது என்று நம்பிக்கை வைப்பதாகும். மூன்றாவதாக, இயல்பாகவே இறைவனுடன் ஒருவனுக்கு இருக்கும் தொடர்பு ஆகும். அது மனிதனை மற்ற எல்லாவிதமான தொடர்புகளிலிருந்தும் திருப்பியவாறு அல்லாஹ்வின் பக்கம் அல்லது எவர் மீது ஒருவருக்கு அன்பு இருக்கின்றதோ அவர் பக்கம் கொண்டு செல்கின்றது.

இதற்கு தாய் மற்றும் குழந்தையின் உதாரணத்தை கூறலாம். இந்த உதாரணமே முதலிலும் கூறப்பட்டது. ஒரு குழந்தைக்கு தாயுடன் இயல்பான ஒரு தொடர்பு இருக்கின்றது. தாயால் குழந்தைக்கு உதவி செய்ய முடியுமா ? முடியாதா? என்பதைப் பார்க்காமல் ஒரு குழந்தை தாயைத் தான் அழைக்கின்றது. கடலில் மூழ்குகின்ற ஒரு சிறுவனுக்கு தனது தாயாருக்கு நீந்தத் தெரியாது என்பது தெரிந்திருந்தும் கூட ஒரு தாய் அவனுக்கு அருகில் இருந்தால் அந்தத் தாயைத் தான் அவன் உதவிக்காக அழைப்பார். வேறு எவரையும் அவர் குரல் கொடுத்து அழைக்க மாட்டான். ஏனென்றால், இது ஒரு உணர்வுப்பூர்வமான விஷயமாகும்.

இதனைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் الدعاء مخ العبادة என்று கூறியுள்ளார்கள். அதாவது துஆ இல்லாமல் மனிதனுடைய ஈமான் முழுமைபெற முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் உள்ள தொடர்பை குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலுள்ள தொடர்பு என்று கூறியுள்ளார்கள். அதாவது கண்களை மூடியவாறு அந்த இறைவன் பக்கம் ஓடுங்கள். அவன் பக்கம் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு இரண்டாவது விஷயம் நல்லொழுக்கமாகும். அதில் நாம் பார்க்கின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை எத்தகைய நுட்பத்திலும் நுட்பமான அம்சங்களைக் கொண்டதாக இருக்கின்றதென்றால் நுட்பமான பார்வையுடையவர்கள் கூட அதைப் பார்க்க முடியாது. அவர்களின் வழிகாட்டல் இல்லாமல் அவற்றை சென்றடைய முடியாது.

பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையைப் பற்றி படிக்கும் போது நல்லொழுக்கத்தின் பெரும் பெரும் விவகாரங்கள் தொடர்பாகவும் கூட அவர்கள் எத்தகைய போதனைகளை வழங்கியுள்ளார்கள் என்றால் எத்தகைய உயர்வான முன்மாதிரியை காட்டியுள்ளார்கள் என்றால் அதைப் பார்க்கின்ற போது முழு வாழ்நாளும் அவர்கள் நல்லொழுக்கத்தைப் பற்றியே படித்து வந்தார்கள். நல்லொழுக்கத்தையே கற்றுத் தந்தார்கள் என்று தெரிய வருகிறது. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள தொடர்பு, உறவினர்களுக்கிடையே உள்ள தொடர்பு, மனிதனின் சொந்த வாழ்விலுள்ள அவனது நல்லொழுக்கம் தொடர்பான விவரங்கள் பொய், நம்பிக்கை துரோகம், தப்பெண்ணங்களிலிருந்து விலகி இருத்தல் ஆகியவை தொடர்பான அவர்களது முன்மாதிரியும் போதனையும் முழுமையானதாகவும் நிறைவானதாகவும் இருந்திருக்கின்றது. எந்தவொரு மனிதனாலும் ஒரு நீண்ட ஆயுளைப் பெற்ற பிறகும் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டியது போன்ற இத்தகைய ஒரு முன்மாதிரியை காட்ட முடியாது.

மறுபுறம் இந்த மேற்கத்திய பெயர்தாங்கி முன்னேற்றம் அடைந்த நாடுகள் அல்லது உண்மையிலேயே முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் பிரிவுகள் உள்ளன. அவர்களது பார்வையில் மார்க்கத்தின் மீது நம்பிக்கை வைப்பதும் அவசியமில்லை. அவ்வாறே மார்க்க போதனைகளுக்கு அவர்கள் கண்ணியம் வழங்குவதும் இல்லை. நல்லொழுக்கத்திற்கும் மதிப்பளிப்பதில்லை. அவர்கள் ஒவ்வொரு பொருளையும் பௌதீக பொருள்கள் என்று கூறுவிடுகின்றனர். எதுவரை என்றால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்.

இவர்களிலிருந்து வந்த தத்துவ வாதிகள் அந்த காலத்தில் இறைவன் உலகத்தை எவ்வாறு படைத்தான் என்பது கேள்வியல்ல. மாறாக, மனிதன் எவ்வாறு இறைவனைப் படைத்தான் என்பது தான் கேள்வியாகும். நவூதுபில்லாஹ் என்று கூறுகின்றனர். அவர்களது பார்வையில் இறைவன் என்பவன் மனிதனின் பரிணாம

வளர்ச்சியின் விளைவாக தோன்றியவனாவான். இறைவன் இருக்கின்றான் என்பது உண்மையாக இருந்தாலும் கூட அவன் மூளையின் வளர்ச்சியின் இறுதித் தொடராக இருக்கின்றான். இதைத் தவிர இறைவன் என்பவன் வேறு எதுவும் அல்ல என்று அவர்கள் கூறுகின்றனர்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயங்களிலிருந்து காப்பாற்றி எத்தகைய வழிகாட்டலை வழங்கினார்கள் என்றால் உண்மை நிலையை புரிந்து கொள்வதற்காக நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் பாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உண்மையை எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் நடுநிலையைப் பேண வேண்டும். அதற்குரிய உரிமையை செலுத்த வேண்டும் என்று கூறினார்கள். இதுவே உண்மையான மார்க்கம் என்று கூறினார்கள். இறைவணக்கம் அவசியமாகும் என்பதில் சந்தேகமில்லை. அது மிகவும் அவசியமானதாகும். அதுவே மனித பிறப்பின் நோக்கமும் ஆகும். அவர்கள் கூறினார்கள். ஆனால்

ولنفسك عليك حق ولزوجك عليك حق ولجارك عليك حق அதாவது உமது நஃப்ஸிற்கும் உம்மீது உரிமை இருக்கின்றது. உமது மனைவிக்கும் உம்மீது உரிமை இருக்கின்றது. உமது அண்டை வீட்டுக்காரருக்கும் உம்மீது உரிமை இருக்கின்றது. இவற்றைப் பெறுவதற்கு மூன்று விதமான வழிமுறைகளைப் கடைபிடிப்பது அவசியமானதாகும்.

முதலாவது விஷயம் துஆ ஆகும். அல்லாஹ்வின் பக்கம் குனிவதாகும். இறைவணக்கம் செய்வதாகும். இரண்டாவது விஷயம் தமது மனதை கட்டுப்படுத்துவது, உணர்வுகளை அமுக்குவது, மனிதனின் மன நிலையைப் பற்றி சிந்திப்பது ஆகும். மூன்றாவது தனது வேலையிலும், தொழிலிலும் நேர்மையாக செயல்படுவது மேலும் உலக மற்றும் விஞ்ஞான அறிவைப் பெறுவதும் அவசியமாகும். முஸ்லிம்களின் மேசமான நிலைக்கு காரணம் மார்க்கற்கு முன்னுரிமை வழங்கி நான் கூறிய விஷயங்களை கருத்தில் கொள்ளாததுதான் ஆகும்.

மாறாக, அவர்கள் தமது மன உணர்வுகளுக்கு மார்க்கம் என்று பெயர் வைத்து விட்டனர். அல்லாஹ் எந்த மார்க்கத்தை இறக்கி வைத்திருந்தானோ அதற்கு அவர்கள் முன்னுரிமை வழங்கவில்லை. அதற்கு அவர்கள் முன்னுரிமை வழங்கி இருந்தால் மற்ற விஷயங்களையும் அவர்கள் கருததில் கொண்டிருப்பர். ஆனால் அவர்கள் மன உணர்வுகளுக்கு மார்க்கம் என்று பெயர் வைத்து அதற்கேற்ப செயல்பட்டனர். அதன் விளைவு என்னவானதென்றால் மற்றவர்களுக்கு அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுவது ஒருபுறமிருக்கட்டும். தாமே அவர்கள் தங்களால் உருவாக்கப்பட்ட இந்த மண உணர்வுகளின் மார்க்த்தைப் பின்பற்றியவாறு முஸ்லிம்களின் கழுத்தை வெட்டுபவர்களாக ஆகிவிட்டனர். இவர்களுக்கு உலகமும் கிடைக்கவில்லை. மார்க்கமும் கிடைக்கவில்லை. தங்களது ஒவ்வொரு பிரச்சனைக்காகவும் உலகவாதிகளின் முன்னால் வையேந்தி நிற்பதைத் தவிர இவர்களுக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை. இது தான் இஸ்லாமிய உலகில் நமக்கு தெரிய வருகிறது. மேற்கத்திய சமுதாயங்கள் மார்க்கத்தை உலகத்தின் கீழ் கொண்டு வந்தாலும் மார்க்கம் என்பது ஒன்றுமேயில்லை. உலகம் தான் எல்லாம் என்று கூறினாலும் அவர்கள் உலகத்தை பெற்றுக் கொண்டு விட்டனர். அவர்கள் வழிதவறிப் போயிருந்தாலும் அவர்கள் பெற விரும்பிய நோக்கத்தை அடைந்து விட்டனர். அதனை அவர்கள் தவறான வழிமுறையின் மூலம் பெற்றிருந்தாலும் சரியே. ஆனால் முஸ்லிம்களுக்கு மார்க்கமும் கிடைக்கவில்லை. உலகமும் கிடைக்கவில்லை.

இந்த இரு விதமான மக்களின் சீர்திருத்தத்திற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அல்லாஹ் அத்தகைய நிலைமைகளில் தான் தனது தூதர்களை அனுப்புகின்றான். அவர்கள் சரியான வழிகாட்டுதலை வழங்கி மார்க்கத்தை மார்க்கத்தின் இடத்திலும், நல்லொழுக்கத்தை நல்லொழுக்கத்தின் இடத்திலும், உலகை உலகத்தின் இடத்திலும் வைக்கின்றனர். வெளிப்படையாக பார்க்கும் போது அவர்கள் ஆன்மீக தூதுச் செய்தியை கொண்டு வருகின்றனர். ஆனால், இந்த மூன்று விஷயங்களுக்கும் அதனுடன் ஆழமான தொடர்பு இருக்கின்றது. ஆன்மீகத்தில் சிறப்பை பெறுபவரது நல்லொழுக்கம் சரியாக இருக்க வேண்டியது கட்டாயமாகும். நல்லொழுக்கத்தை கண்காணிப்பதன் மூலம் பௌதீகம் சரியாவதும் கட்டாயமாகும். எவரது உலகம் சரியாக இருக்கின்றதோ மேலும் எவர் உலக விஷயங்களில் முன்னேறிக் கொண்டு இருக்கிறாரோ அவரது நல்லொழுக்கமும் சரியானதாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமானதல்ல. எவரது நல்லொழுக்கம் சரியாக இருக்கின்றதோ அவரது மார்க்கமும் சரியாக இருக்கும் என்று கூறிவிட முடியாது. இதற்கு காரணம் அல்லாஹ்வின் நாட்டம் மனிதனை தன் பக்கம் கொண்டு வருவதாகும். இதுவே அவனது பிறப்பின் நோக்கமாகும். அழகிய நல்லொழுக்கத்தை சரிசெய்து

கொள்வது பௌதீக முன்னேற்றத்தை மார்க்கத்தின் கீழ் கொண்டு வந்து விடுகின்றது. அதன் மூலமாக எவர் அதன் பக்கம் கவனம் செலுத்துகின்றாரோ அவருக்கு மற்ற அனைத்துமே தாமாகவே கிடைத்து விடுகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான். முழுமை பெற்ற நம்பிக்கையாளருக்கு எல்லா முன்னேற்றங்களும் கிடைத்து விடுகின்றது. ஆனால் எவர்கள் உலகவாதிகளாக மட்டும் இருக்கின்றனரோ அவர்கள் தொடர்பாக அல்லாஹ் ضل سعيهم في الحيوة الدنيا (18:105) அதாவது அவர்களது அனைத்து முயற்சிகளும் உலகிலேயே மறைந்து போய் விடுகின்றன என்று கூறுகின்றான்.

இந்த மூன்று விஷயங்களையும் பெறுவதற்கு உலகில் தனித்தனி வழிகள் உள்ளன. ஆனால் ஒரு வழி எல்லாவற்றிற்கும் பொதுவாக இருக்கின்றது. அது இறைவனுடன் முழுமையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். நல்லொழுக்கத்திற்காக முயற்சி செய்யும் போது நல்லொழுக்கம் கிடைத்துவிடும். பௌதீகத்திற்காக முயற்சி செய்யும் போது பௌதீகம் கிடைத்து விடும். உலக முன்னேற்றங்கள் கிடைத்து விடும். ஆனால் ஒவ்வொரு முயற்சியின் விளைவும் அதன் வட்டத்திற்குள்ளேயே இருக்கும். அதை விட்டு அது வெளியேறாது. ஆன்மீகத்தை சரி செய்பவர்களுக்கு இந்த எல்லா விஷயங்களும் கிடைத்து விடும்.

நல்லொழுக்கத்தின் எல்லா அம்சங்களையும் மனிதன் கடைபிடித்து நடந்தால் அதற்கேற்ப செயல்பட்டால் பிறகு உண்மை, நேர்மை ஆகிய அனைத்தும் அவருக்கு கிடைத்துவிடும். அறிவு, திறமை, தந்திரமாக செயல்படுவது, தகுதி, உழைப்பு ஆகிவற்றை அவர் பெற்றுக் கொள்வார். அவற்றிற்கு ஏற்ப அவர் செயல்படுவார். அதன் விளைவாக அவருக்கு உலகமும் கிடைத்து விடும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள். எவர் நம்முடன் ஆழமான தொடர்பு வைத்திருக்கின்றாரோ அவரே இன்றைய நாட்களில் நம்மிடமிருந்து அதிகமாக பலன் பெறுகின்றார். இறைவனுக்கு எவரிடமும் பகைமை இல்லை. நாம் முழுமையான முறையில் நம்மை இறைவன் முன்னால் போட்டுவிட வேண்டும் என்பதே அவசியமாகும். அதுவே தேவைப்படுகிறது. தன்னைத்தானே அவன் முன்னால் வீழ்த்திக் கொள்ளும் போது தானாகவே எல்லாமே கிடைத்து விடும். எந்த முன்னேற்றம் நமக்கு தேவைப்படுகிறதோ அது தானாகவே நமக்கு கிடைத்து விடும். ஒரு பொதுவான உதாரணம் இதுவாகும். நெருப்பிற்கு அருகில் உட்காரும் போது மனிதனின் உடல் உறுப்புகள் சூடாகி விடுகின்றன. அவ்வாறே மனிதன் எல்லாவற்றையும் விட்டு விட்டு இறைவன் முன்னால் வந்து விடும் போது இறைவனது அருளிலிருந்து அவனுக்கு பங்கு கிடைக்காமல் போவது எவ்வாறு சாத்தியமாகும்.

எனவே, நாம் இறைவனை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவனால் அனுப்பப்பட்ட அந்த மார்க்கத்தின் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவன் மீதுள்ள அன்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் அது ஒரு இயல்பான விஷயமாக ஆகிவிட வேண்டும். இந்த விஷயம் தான் நமது நல்லொழுக்கத்தின் உயர்வான தரத்தை நிலைநாட்டக் கூடியதாக இருக்கும். மேலும் இதன் மூலமாக உலக முன்னேற்றங்களையும் நாம் பெற்றுக் கொண்டே செல்வோம். அல்லாஹ்வின் ஒளியிலிருந்து நாம் பங்கு பெற முயற்சி செய்தால் அப்போது தான் நாம் உண்மையில் அதன் அருள்களை பெற முடியும். நாம் ஒரு பேரார்வத்துடன் இந்த ஒளியிலிருந்து பங்கு பெற முயற்சி செய்தால் பிறகு இருளாக இருக்கின்ற பொய்யும் நம்மை விட்டு தானாகவே விலகி சென்று விடும். சோம்பேறித்தனம், ஏமாற்று வேலை, மோசடி மற்றவர்களின் உரிமையை பறிப்பது போன்ற தீமைகள் ஆகிய இவையெல்லாம் இருள்களாகும். இவை அல்லாஹ்வின் ஒளியின் காரணமாக நம்மை விட்டு தாமே விலகி சென்று விடும். நமது நல்லொழுக்கமும் உயர்ந்து கொண்டே செல்லும். உலக முன்னேற்றங்களும் நமக்கு கிடைக்கும். எனவே இந்த சமுதாயத்தில் இருந்தவாறு நமது தலைமுறையை உலகின் தீய தாக்கத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றால் மார்க்கத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் இடையேயுள்ள இணைப்பை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டுமென்றால் உலக முன்னேற்றத்தையும் மார்க்கத்தின் கீழ் இருந்தவாறு அவர்களை பெற வைக்க வேண்டுமென்றால் நாம் அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமாகவே அது நடைபெறும். அல்லாஹ் நமக்கு இதற்கான தஃபீக்கை வழங்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 24.04.15
Tamil Translation : Moulavi. M. Rafeeq Ahmad
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516